செ.வெ.எண்.55 நாள்.31.01.2018

## காஞ்சிபுரம் மாவட்டம்

## தொழுநோய் ஒழிப்பு தின விழிப்புணர்வு உறுதி மொழி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசு சுகாதார அலுவலர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் ஏற்றனர்

**************

தேசதந்தை மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினமான ஜனவரி மாதம் 30 தேதி ஆண்டு தோறும் தொழுநோய் ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுறுத்தலின்படி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 30.01.2018 அன்று சிறப்பு கிராம சபை கூட்டங்களை நடத்தி தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு செய்திகள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இன்று 31.01.2018 காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு கூடடத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் “ஸ்பர்ஷ்” தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைவரும் ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

தொழுநோய் லெப்ரா பாக்டிரியா என்ற கிருமினால் உருவாகிறது. இது தொற்றுநோய் அல்ல. இலவசமாக சிகிச்சை அனைத்து மருத்துவமனைகளிலும் கிடைக்கிறது. ஆரம்ப நிலையிலேயே தொழுநோயை கண்டுபிடித்தால் ஆறு அல்லது பனிரண்டு மாதங்கள் (6/12) தொடர் கிசிச்சை அளித்து ஊனமற்றவர்களாக வாழவைக்கலாம்.

தொழுநோயின் அறிகுறிகள், சிவந்த அல்லது வெளிறிய 1 அல்லது அதற்கும் மேற்பட்ட தேமல்கள், உணர்ச்சியற்று வறண்டு வலியற்று இருத்தல். எண்ணெய் தடவியது போன்று தோல், முகம் மற்றும் கண் இமைகளில் முடியில்லாது இருத்தல், காது, காதுக்கு பின்னாலும் சிறு, சிறு முடிச்சு (nodules) போன்ற கட்டிகள் இருத்தல். கை, கால்களில் சதை குறைந்து வறண்ட உணர்ச்சியற்ற நிலை ஆகும். கூட்டுமருந்து சிகிச்சை வழங்குவதன் மூலம் தொழுநோயினை முற்றிலும் குணப்படுத்த முடியும். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை உதாசீனப்படுத்தாமல் அரவணைத்து மற்றவர்களை போல் இயல்பாய் வாழ உதவுவோம். நம் மாவட்டத்தில் இந்த வருடத்தில் 151 புதிய தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளோம்.

எனவே அனைவரும் இந்நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்து மேற்கண்ட அறிகுறிகள் உள்ளவர்களை, பொது சுகாதார ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி தொடர் கூட்டு மருந்து சிகிச்சை வழங்கி, தொழுநோயற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என தெரிவித்தார். தொழுநோயினால்

பாதிக்கப்பட்டு 6 மாதங்கள் தொடர் சிகிச்சை அரசு மருத்துவமனையில் பெற்று பூரண குணமடைந்தவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.சுந்தராஜன், துணை இயக்குநர் மருத்துவபணிகள் (தொழுநோய்) மரு.டி.கனிமொழி, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.செந்தில்குமார், துணை இயக்குநர் மருத்துவபணிகள்(காசநோய்), முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி, நகராட்சி ஆணையாளர் திரு.சர்தார், நகர் நல அலுவலர் மரு.முத்து, வட்டார மருத்துவ அலுவலர்கள், மாவட்ட நலக்கல்வியாளர் திரு.பி.உமாசங்கர், சுகாதாரத்துறை பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.